**இளைஞர் நலன் மற்றும்**
**விளையாட்டுமேம்பாட்டுத் துறை**

கொள்கை விளக்கக் குறிப்பு

**2014 -2015**

**மானியக் கோரிக்கை எண்–49**

முனைவர். எஸ். சுந்தரராஜ்
விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
**2014**

# <u>அட்டவணை</u>


| படல எண் | முகவுரை | பக்க எண் |
|---|---|---|
| | முகவுரை | 1 |
| 1. | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | 5 |
| 2. | விளையாட்டுத் திறன் கண்டறிதல் | 11 |
| 3. | விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல் | 15 |
| 4. | பயிற்சித் திட்டங்கள் | 25 |
| 5. | விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் | 32 |
| 6. | உதவித் தொகைகள், விருதுகள், ஊக்கத் தொகைகள் | 47 |
| 7. | விளையாட்டுக் கட்டமைப்பு | 55 |
| 8. | முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம் திட்டம் | 61 |
| 9. | இளைஞர் நலத் திட்டங்கள் | 62 |
| 10. | தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல் | 65 |
| 11. | தேசிய மாணவர் படை | 67 |
| 12. | நாட்டு நலப்பணித்திட்டம் | 69 |
| 13 | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் | 71 |
| | <u>பின் இணைப்பு</u><br>தமிழ்நாட்டில் தற்போது உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் | 73 |

## முகவுரை

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி துணை நிற்பது போல், உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

செல்வி ஜெ ஜெயலலிதா
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

தேசிய வளர்ச்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் விளையாட்டு ஒரு சக்தி மிக்க கருவியாக உள்ளது. அது போல ஒரு நாட்டின் வலிமை மிக்க தூண்களாக இளைஞர்கள் உள்ளனர். விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, ஆற்றல் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழ்நாடு அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறைக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது. 2013–2014–ஆம் ஆண்டில் பல்வேறு புதுமையான திட்டங்கள் துவக்கப்பட்டு ரூ.210.52 கோடி அளவிற்கு இத்துறையின் நிதி ஒதுக்கீடானது உயரிய நிலையை அடைந்துள்ளது.

உயர்தரமான விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், உடல் தகுதி கலாச்சாரத்தினை மேம்படுத்தியும், அடித்தட்டு நிலையிலுள்ளவர்களது திறமைகளை மெருகேற்றியும் முழு அளவில் திறனை வளர்த்து, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்த நிலையினை எய்தி, தமிழ்நாட்டை

விளையாட்டில் முன்னோடியான மாநிலமாக உயர்த்துவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகம், இளைஞர் நல இயக்குநரகம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் நேரு யுவகேந்த்ரா சங்கேதன் ஆகியவை இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. இளைஞர்களிடையே நல்ல தரத்தினைச் சிறிது சிறிதாக உருவாக்கி அவர்களை பொறுப்புள்ளவர்களாகவும், நாட்டின் வெற்றிகரமான குடிமக்களாகவும் மலரச் செய்யும் நோக்குடன் இத்துறைகள் பல்வேறு விளையாட்டு மற்றும் இளைஞர் நலச் செயல்பாடுகளைச் செய்கின்றன.

விளையாட்டு சம்பந்தமான அரசின் அனைத்து கொள்கை முடிவுகளையும் விளையாட்டுத் துறையின் உயரிய அங்கமான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்படுத்தி வருகின்றது. நாட்டிலேயே, 2005–ம் ஆண்டில் மாநில அரசால் விளையாட்டிற்கென துவங்கப்பட்ட முதல் விளையாட்டுப் பல்கலைக்கழகமான, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அளப்பரிய செயல்பாடுகள் மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டினை மேம்படுத்தி வளர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

தமிழ்நாடு, நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் 3,70,018 உறுப்பினர்களுடன் நாட்டிலேயே அதிகபட்ச எண்ணிக்கையிலான தன்னார்வ தொண்டர்களையுடைய தனித்தன்மை பெற்றுள்ளது.

98,790 எண்ணிக்கை கொண்ட தேசிய மாணவர் படை மிகுந்த துடிப்புடன் மாநிலத்திற்கு பெருமை சேர்க்கிறது.

## படலம் – 1

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

மக்களிடையே விளையாட்டினை மேம்படுத்தவும், விளையாட்டில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பான நிலையினை எய்தவும் அரசால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 1992–ல் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து “தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்” அமைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாணையத்தின் தலைவர் ஆவார்.

### 1.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் குறிக்கோள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. மாநிலத்தில் விளையாட்டின் தரத்தை மேம்படுத்தவும், விளையாட்டை உயர்த்துவதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகளை உயர்த்தி, மேம்படுத்துதல்.

2. மாநிலத்தில் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்தவும், உயர்த்தவும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களை செயல்படுத்துதல்.

3. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்கேற்கச் செய்தல்.

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மேன்மேலும் உயர்ந்த அளவில் சாதனைகள் அடைய, பல்வேறு ஊக்க உதவித் தொகை மற்றும் விருதுகளை அளித்து ஊக்குவித்தல்.

5. மாநிலத்தின் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, திட்டமிடுதல் மற்றும் மேம்படுத்துதல்.

6. விளையாட்டு மேம்பாடு தொடர்பான மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் உயிர் வேதியியல், உளவியல் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றை துவக்கி, மேற்கொண்டு, ஆதரவு தந்து, ஊக்குவித்து, உற்சாகமளித்தல்.

7. மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்து, போட்டி விளையாட்டு மற்றும் விளையாட்டுகளில் பங்கேற்க வசதி செய்தல்.

8. மாநிலத்தில் வீர சாகச விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

9. தற்போது இயங்கி வரும் அல்லது புதிய விளையாட்டு நிறுவனங்கள், நிறுவ, நடத்த, மேற்பார்வை மற்றும் நிர்வாகம் செய்ய, மேலும் அத்தகைய நிறுவனங்களில் முழுமையாக அல்லது பகுதியாக செயல்கள் மற்றும் செயல்பாடுகளைச் செய்தல்.

10. பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் போட்டி விளையாட்டுக்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சியளித்தல்.

11. பொதுமக்களிடையே உடற்பயிற்சியின் அவசியத்தை உணரச் செய்வதன் மூலம் விளையாட்டு மற்றும் ஆரோக்கியத்தின் மீது கவனம் கொள்ளச் செய்து, அவர்களை விளையாட்டில் தொடர்ந்து ஈடுபடச் செய்வதன் மூலம் தமிழ்நாட்டை ஆரோக்கியமான மற்றும் வலிமையான மாநிலமாக ஆக்குதல்.

தமிழ்நாடு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சில தனிநபர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குழுப் போட்டிகளில் சிறந்து விளங்குகிறது. தமிழக அரசு அளிக்கும் மிகச் சிறந்த விளையாட்டுக் கட்டமைப்புகள், பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஊக்க உதவித் தொகைகள் ஆகியவற்றின் மூலம் இந்நிலையினை அடைய முடிந்துள்ளது.

## 1.2 விளையாட்டில் சிறப்பான நிலையினை அடைந்திட திறன் வாய்ந்த செயல்முறை

விளையாட்டில் சிறந்துள்ள பெரும்பாலான நாடுகள் நீண்ட கால உத்திகளைக் கடைப்பிடித்து வருகின்றன. தமிழ்நாடு, நீண்ட கால உத்தியினை, கீழிலிருந்து மேல் நோக்கி செல்லும் பிரமிடு முறையினை கடைப்பிடித்து வருகின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட நீண்டகால உத்தி, ஐந்து பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான, செயல் திட்டத்தினைக் கொண்டுள்ளது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை–1, அடித்தள திறன் கொண்ட அளவிலும், நிலை–5, அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது.

**நிலை 1: மக்கள் திரள் பங்கேற்பு மற்றும் பரந்த அடித்தளம்**

உலகளாவிய திறமைகளைக் கண்டறியும் திட்டத்தின்கீழ், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8–வது வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் உடல் திறனறியும் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இச்சோதனைகள் மூலம் சிறந்த திறனுள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அடுத்த நிலை பங்கேற்பிற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றனர்.

கிராமம் மற்றும் கோட்ட அளவில் விளையாட்டுக் கட்டமைப்புகள் கொண்ட “பைக்கா” மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு, பெருமளவில் மக்கள் கலந்து கொள்ளும் அளவில் “பைக்கா” விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநிலம் முழுவதும் பெரும்பாலோனார் கலந்து கொள்ளும் வகையில் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

முதல் முறையாக, கிராம மக்களிடையே பெரும்பாலோனார் கலந்து கொள்ளும் வகையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கிராம விளையாட்டுக்கள் பல்வேறு விளையாட்டுக்களில், அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டது.

**நிலை 2: மாவட்ட அளவு**

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் 400 மீ. ஓடுதளப் பாதையுடன், கால்பந்து விளையாட்டுத் திடல் கொண்ட விளையாட்டு அரங்கங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. 23 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை மூலம் வயது வாரியாக மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**நிலை 3: மாநில அளவு**

உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், பல்வேறு விளையாட்டுக்களில், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி உள்ளடக்கிய பல மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்காக 10 விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குழுக்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பெருந்தொகை பரிசாக வழங்கப்பட்டது. இது தவிர, மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு மாநிலம் மற்றும் தேசியப் போட்டிகள் நடத்திட நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**நிலை 4 மற்றும் நிலை 5 தேசிய / பன்னாட்டு அளவு**

கீழ்மட்ட அளவில் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளின் பலன்களாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பலர், தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்றுள்ளனர். தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துப்பந்து, கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபாடி, நீச்சல், வாள்வீச்சு, மேசைப்பந்து, சதுரங்கம் ஆகிய விளையாட்டுக்களில் தமிழக வீரர்கள் தேசிய அணிகளில் பங்கேற்றுள்ளனர்.

## 1.3 ஊக்கத் தொகைகள்

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையினை தமிழக அரசு வழங்கி வருகிறது. சர்வதேச மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினையும் தமிழக அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு ரூ.2.00 கோடி மாநில அரசால் வழங்கப்படும்.

**மேலும், கடந்த 2012–ஆம் ஆண்டில், ஜுன் மாதம், உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தினை 5–வது முறையாக தனது மகுடத்தில் பதித்திருக்கும் "கிராண்ட் மாஸ்டர்" விஸ்வநாதன் ஆனந்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.2.00 கோடி வழங்கி சிறப்பித்துள்ளார்கள்.**

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்லக் கூடிய 5 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தங்களுடைய திறமையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டொன்றுக்கு தலா ரூ.25 இலட்சம் வழங்கும் சிறப்பு உதவித் தொகை திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

பயன்பாட்டில் உள்ள உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் மற்றும் சிறப்பு மானியத் தொகையினைக் கொண்டு, சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. கடந்த 2013–ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் விஸ்வநாதன் ஆன ந்த் மற்றும் மாக்னஸ் கார்ல்ஸன் ஆகியோருக்குமிடையே "பிடே" உலக சதுரங்க வாகையர் போட்டியினை பிரம்மாண்டமாக நடத்திட மாநில அரசு ரூ.29.15 கோடியினை வழங்கியது.

## படலம் – 2

## விளையாட்டுத் திறன் கண்டறிதல்

சாம்பியன்களை உருவாக்க, திறமையான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை கண்டறிவது அவசியமாகும். இதனை அடைவதற்கு கீழ்க்கண்ட நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. உலக திறனாய்வுத் திட்டம்
2. விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்வதற்கான தேர்வு
4. முதன்மை விளையாட்டு விடுதியில் வீரர்கள் சேர்வதற்கான தேர்வு

### 2.1 உலக திறனாய்வுத் திட்டம்

#### தேர்வுகள் நடத்துதல்

அனைத்து பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 – ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வேகம், வலிமை, திண்மை, சுறுசுறுப்பு மற்றும் அளப்பரிய ஆற்றல் ஆகியவற்றை கண்டறியவும், எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாகுவதற்கு திறமையை மதிப்பிடவும் மாநில அரசு இந்த திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. பள்ளிகளில் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் உடற்திறன் தேர்வுகள் நடத்தி, திறன்களை குறிப்பிட்டு மதிப்பீடு அட்டையை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. பள்ளி நிர்வாகிகள் தேர்வு விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும், அவர்கள் அதனை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த உலக திறனாய்வுத் திட்டத்தினை

செயல்படுத்திட, 2013–2014–ஆம் ஆண்டில் அரசு ரூ.14.38 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

உலகத் திறனாய்வுத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட திறன் வாய்ந்த வீரர்களுக்கு, கல்வி மாவட்டம் மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்பான திறன்மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஆற்றலுக்கேற்றவாறு பல்வேறு சிறப்பு அகாடமியில் சேர்க்கப்படுகின்றனர். இந்த சிறப்பு அகாடமி அவர்களுக்கு அறிவியல் ரீதியான பயிற்சி அளிக்கப்பட்டு போட்டிக்கு தயார்படுத்தப்படுகின்றனர்.

<u>வளரும் திறனாளர்களுக்கு உதவித் தொகை திட்டம்</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட வளரும் திறனாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/– வீதம் 12 மாதங்களுக்கு தலா ரூ. 6,000/– வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஊக்க உதவித் தொகையாக வழங்க மொத்தம் ரூ.1,94,40,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒப்பளித்துள்ளார்.

## 2.2 <u>கல்வி மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவிலான திறமையானவர்களைக் கண்டறிதல்</u>

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 67 கல்வி மாவட்டங்களில் தடகள விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. இதில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் சுமார் 500 சிறுவர், சிறுமியர் பங்கேற்கிறார்கள். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து

கொள்கிறார்கள். (அருகில் உள்ள கல்வி மாவட்டங்களுடன் ஒருங்கிணைத்து)

ஒவ்வொரு மண்டல அளவிலான போட்டிகளில் தலையாய திறனுடன் செயலாற்றுபவர்களைக் கண்டறிந்து 15 நாட்கள் இருப்பிட பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாமில் சிறந்த சிறுவர் / சிறுமியர்கள் மாநில அளவிலான தேர்வுகளுக்குக் கண்டறியப்படுவர். அவ்வாறு கண்டறியப்பட்ட சிறந்த திறன் மிக்கவர்கள் சிறப்பு அகாடமிகளில் ஒவ்வொரு வருடமும் சேர்க்கப்பட்டு தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 2.3 <u>விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு (இரண்டு கட்டம்)</u>

விளையாட்டு விடுதிகளில் 7, 8, 9 மற்றும் 11வது வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவிகள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகள் நடத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். 23 விளையாட்டு விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 1760 ஆகும். தற்போது, 1610 விளையாட்டு வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவர்களுக்கு அறிவியல்பூர்வமான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 2.4 <u>ஆண்கள் / பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு</u>

கல்லூரிகளில் பயிலும் பல்வேறு விளையாட்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பெற்றி பெறும் திறமையுடைய மாணவர்கள் / மாணவியர்களை சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகள் முறையே ஜவஹர்லால் நேரு

விளையாட்டரங்கம் மற்றும் நேரு உள் விளையாட்டரங்கம் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகளில் 80 பேரும், பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் 60 பேரும் உள்ளனர்.

## 2.5 முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான தேர்வு

சிறந்த விளையாட்டு வல்லுநர்களால், 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த 25 சிறுவர்கள் மற்றும் 25 சிறுமியர்கள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான திறன் கண்டறியும் தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையில் துவங்கப்பட்டுள்ள முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் அனுமதிக்கப்பட்டு, சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## படலம் – 3

## விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்துதல்

பல்வேறு விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் திட்டம் ஏழு நிலைகளின் கீழ் விரிவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளாவன – முதன்மை நிலை விளையாட்டு மையம், சிறப்பு அகாடமிகள், விளையாட்டு விடுதிகள், கல்லூரிகளில் இணை விளையாட்டு மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள், சிறப்பு மேம்பாட்டு மையங்கள், பயிற்சி மையங்கள் மற்றும் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.

### 3.1. முதன்மை நிலை விளையாட்டு மையம்

சிறந்த திறமை வாய்ந்த 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட 25 மாணவர் மற்றும் 25 மாணவியர்களுடன் 2012–ஆம் ஆண்டு சென்னையில் முதன்மை நிலை விளையாட்டு மையம் துவங்கப்பட்டது. இவர்களுக்கு திட்டமிடப்பட்ட விஞ்ஞான பூர்வ பயிற்சி மற்றும் சத்தான உணவு வழங்குவதன் மூலம் அவர்களது செயலாக்கத் திறமை உயர்த்தப்படுகிறது. அவர்களது திறமையை வளர்க்கும் வகையில் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டு பயிற்சியாளர்கள் சென்னையில் உள்ள சிறந்த பள்ளிகளில் அனுமதிக்கப்படுவர். தற்போது 23 சிறுவர்கள், 22 சிறுமியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

| வ. எண். | முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைந்துள்ள இடம் | விளையாட்டு | மாணவ, மாணவியரின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | நேரு உள் விளையாட்டு அரங்கம் – சிறுமியர் | தடகளம் | 15 | 25 |
| | | இறகுப்பந்து | 10 | |
| 2. | ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் – சிறுவர் | தடகளம் | 15 | 25 |
| | | இறகுப்பந்து | 10 | |
| | மொத்தம் | | | 50 |

மேலும் 3 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் ஸ்ரீரங்கம் (திருச்சி மாவட்டம்), ஈரோடு மற்றும் திருநெல்வேலியில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.2 சிறப்பு விளையாட்டு அகாடமி

அகில உலக அளவில் தங்குமிடம் அல்லாத விளையாட்டு அகாடமிகள் பிரபலம் ஆகியுள்ளன. தமிழக அரசு பல்வேறு இடங்களில் சிறப்பு அகாடமிகளை நிறுவியுள்ளது. இதில், உலக திறனாய்வுத் திட்டத்தின்கீழ் 10–க்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் திறனாளர்களைத் தேர்ந்தெடுத்து திறமை மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் சிறப்பு அகாடமியில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அனுபவம்மிக்க பயிற்றுநர்களைக் கொண்டு விஞ்ஞான பூர்வ பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் இந்த அகாடமியில் பயிற்சி முகாம்கள் நடத்திட அரசு ரூ.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

கீழ்க்கண்ட இடங்களில் சிறப்பு விளையாட்டு அகாடமி இயங்குகிறது:

| வ. எண். | அகாடமி பெயர் | பயிற்சி முகாம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|
| 1. | குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி | சென்னை |
| 2. | நீச்சல் குள வளாகத்தில் டைவிங் அகாடமி | சென்னை |
| 3. | சிறுவர் சிறுமியருக்கான வளைகோல்பந்து அகாடமி | சென்னை |
| 4. | சந்திரா மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 5. | ஏ.கே.ஜி. மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 6. | டால்பின் நீச்சல் அகாடமி | சென்னை |
| 7. | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |
| 8. | மாணவர்களுக்கான கால்பந்து அகாடமி | நாகப்பட்டினம் |
| 9. | எறிதல் அகாடமி | திருச்சி |
| 10. | மிததூர அகாடமி மற்றும் நீண்டதூர ஓட்ட அகாடமி | திருவண்ணாமலை |
| 11. | மாணவியர்களுக்கான கால்பந்து அகாடமி | சிவகங்கை |
| 12. | மேசைப்பந்து அகாடமி | மதுரை |

இந்த அகாடமியில் சுமார் 1200 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### 3.2.1 விளையாட்டு விடுதிகள்

கடந்த 2011–12 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் மதுரை, திருநெல்வேலி, சென்னை (3), கிருஷ்ணகிரி,

திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சி, ஈரோடு (2) மற்றும் கடலூர் (என்எல்சி) ஆகிய 12 இடங்களில் 860 மாணவர்களைக் கொண்டு விளையாட்டு விடுதிகள் இயங்கி வந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் படிப்படியாக துவங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக, 5 புதிய விளையாட்டு விடுதிகள் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் துவங்கப்பட்டன. 2–ம் கட்டமாக, 2012–13ஆம் ஆண்டில், 6 புதிய விளையாட்டு விடுதிகள் நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் தேனி ஆகிய இடங்களில் ஒவ்வொரு விளையாட்டு விடுதியிலும் தலா 60 மாணவர்களுடன் துவங்கப்பட்டன. 2013–14ஆம் ஆண்டில் மேற்படி 23 விளையாட்டு விடுதிகளிலும் 1760 மாணவர் / மாணவியர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டு விடுதிகளில் வழங்கப்படும் உணவில் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் பொருட்டு உணவிற்கான செலவினம் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.250/– வீதம் உயர்த்தி கடந்த 22.01.2014 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

தற்போது, ஆண்டொன்றுக்கு 320 நாட்களுக்கு ஒவ்வொரு மாணாக்கருக்கும் நாள் ஒன்றுக்கு தலா ரூ.250/– வீதம் உணவுச் செலவினத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணாக்கருக்கும் சீருடை படியாக ரூ.1800/–, விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ.400/– மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.300/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

விளையாட்டு விடுதிகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன:

| வ. எண். | விளையாட்டு விடுதி | விளையாட்டுக்கள் |
|---|---|---|
| 1 | விளையாட்டு விடுதி, ஒய்.எம்.சி.ஏ விளையாட்டு விடுதி, சென்னை | குத்துச்சண்டை, கால்பந்து மற்றும் வளைகோல் பந்து |
| 2 | என்எல்சி விளையாட்டு விடுதி, நெய்வேலி | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 3 | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம், திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, வளைகோல் பந்து, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை |
| 4 | விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை | தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல் பந்து |
| 5 | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம், திருநெல்வேலி | தடகளம், வளைகோல் பந்து நீச்சல், கையுந்துபந்து, குத்துச்சண்டை மற்றும் கூடைப்பந்து |
| 6 | மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு | தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 7 | மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, பாரதி வித்யா பவன், திண்டல், ஈரோடு | கூடைப்பந்து |
| 8 | விளையாட்டு விடுதி (சிறுவர்கள் / சிறுமியர்கள்), செல்வம் மேனிலைப்பள்ளி, நாமக்கல் | தடகளம் (சிறுமியர்), வாள்சண்டை (சிறுவர் / சிறுமியர்) |
| 9 | விளையாட்டு விடுதி, அரசு மேனிலைப்பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |

| | | |
|---|---|---|
| 10 | மகளிர் விளையாட்டு விடுதி, திருவண்ணாமலை | தடகளம், கைப்பந்து மற்றும் வளைகோல் பந்து |
| 11 | விளையாட்டு விடுதி, கிருஷ்ணகிரி (சிறுவர்) | தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து |
| 12 | மகளிர் விளையாட்டு விடுதி, நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை | கையுந்துபந்து மற்றும் டென்னிஸ் |
| 13 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), கோயம்புத்தூர் | தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துபந்து |
| 14 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), கடலூர் | இறகுபந்து, தடகளம் மற்றும் டேக்வாண்டோ |
| 15 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), தஞ்சாவூர் | கூடைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் கையுந்துபந்து |
| 16 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), திண்டுக்கல் | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 17 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), நாகர்கோவில் | தடகளம், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல் |
| 18 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), சிவகங்கை | தடகளம் மற்றும் கால்பந்து |
| 19 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), தூத்துக்குடி | தடகளம் மற்றும் கூடைப்பந்து |
| 20 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), நாமக்கல் | கால்பந்து மற்றும் கபாடி |
| 21 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), பெரம்பலூர் | தடகளம் மற்றும் கைப்பந்து |
| 22 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), அரியலூர் | வளைகோல் பந்து, கைப்பந்து மற்றும் பளுதூக்குதல் |
| 23 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), தேனி | கூடைப்பந்து மற்றும் கபாடி |
| | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), தேனி | கையுந்துபந்து |

தற்போது விளையாட்டு விடுதிகளில் 1610 பயிற்சியாளர்கள் உள்ளனர்.

### 3.2.2 ஆண்கள் / பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி

மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கிலும், மாணவியர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை நேரு உள் விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகிறது. இம்மாணாக்கர்களுக்கு நவீன விளையாட்டுப் பயிற்சிகளும், சத்தான உணவும் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர் மட்டுமே இச்சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேரத் தகுதி உடையவர்கள் ஆவர். இம்மாணவ / மாணவியர்களுக்கு அனுபவமிக்க பயிற்றுநர்களைக் கொண்டு கீழ்க்காணும் விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

**மாணவியர்கள்**

| வ. எண். | விளையாட்டு விடுதி | விளையாட்டு | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு விளையாட்டு விடுதி, நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை | தடகளம் | 20 | 60 |
| | | கால்பந்து | 20 | |
| | | கையுந்துபந்து | 20 | |

**மாணவர்கள்**

| வ. எண். | விளையாட்டு விடுதி | விளையாட்டு | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு விளையாட்டு விடுதி, | தடகளம் | 15 | 80 |
| | | கூடைப்பந்து | 24 | |
| | | குத்துச்சண்டை | 10 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | கையுந்துபந்து | 24 | |
| | | டேக்வாண்டோ | 07 | |

## 3.3 <u>இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்</u>

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் நிறைவான அளவில் உள்ள கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விளையாட்டில் தலைசிறந்த கல்லூரி மாணவ / மாணவியர்க்கு ரூ.6000/– வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், கடந்த 2012–2013–ஆம் ஆண்டில் 23 கல்லூரிகளைச் சேர்ந்த 219 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பயனடைந்துள்ளனர். கடந்த 2013–2014ஆம் ஆண்டில் 37 கல்லூரிகளைச் சேர்ந்த 329 விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பயனடைந்துள்ளனர்.

## 3.4 <u>விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்</u>

இத்திட்டத்தின் கீழ் கல்வி நிறுவனங்களின் நிறுவன எல்லைகளுக்கு அப்பாற்பட்டு, நிறுவனம் அமைந்த பகுதி மற்றும் சமூகத்திற்குட்பட்டு, விளையாட்டு திறனை மேம்படுத்த திறன் மேம்பாட்டு மையம் நிறுவப்படுகிறது. அக்கல்வி நிறுவனம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றினை கையெழுத்திட வேண்டும். 15 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட கடந்த ஆண்டு ரூ.15.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

## 3.5 <u>சிறப்பு மேம்பாட்டு மையம்</u>

1997–ஆம் ஆண்டு வேலூருக்கு அருகில் உள்ள சத்துவாச்சாரியில் பளுதூக்கும் சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையம் நிறுவப்பட்டது. இங்கு 30 ஆண்கள் மற்றும் 12 பெண்கள் (மாணவர்கள் மற்றும் மாணவர் அல்லாதவர்கள்) பயிற்சி பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

வளைகோல்பந்து விளையாட்டிற்கென தஞ்சாவூரில் ஒரு சிறப்பு மேம்பாட்டு மையமும், நாகப்பட்டினத்தில் கூடைப்பந்திற்கென ஒரு சிறப்பு மேம்பாட்டு மையமும் 30 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.1.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

## 3.6 <u>பயிற்சி மையங்கள்</u>

### 3.6.1 <u>நீச்சல் பயிலகங்கள்</u>

‘நீச்சல் கற்றுக்கொள்’ பயிற்சியானது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நீச்சல் குள வளாகங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு நபர் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் பயிற்சி பெறுவதன் மூலம் 12 நாட்களில் நீந்தக் கற்றுக்கொள்கிறார். 2013–14 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 22 மையங்கள் மூலம் 11,519 நபர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர்.

### 3.6.2 <u>கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்கள்</u>

சில கிராமங்களில் பல ஆண்டுகளாக பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக)

ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடம் நிறுவப்பட்டுள்ளது. அம்மையங்களுக்கு தேவையான விளையாட்டுத் திடல் வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியவைகள் வழங்கப்பட்டு, கண்டறியப்பட்ட விளையாட்டில் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் 31 கிராமங்களில் கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 3.7 <u>வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்</u>

தேசிய அளவில் தங்கப்பதக்கம் வென்ற 20 வயதிற்கு உட்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வெற்றியாளர்கள் அவர்கள் விருப்பப்பட்ட நவீன விளையாட்டு அரங்கங்களை இலவசமாக பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் ரூ.2.00 இலட்சம் வரை ஊட்டச்சத்து, உடை, விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காகவும், வெளிநாடு சென்று பயிற்சி பெறவும், மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவும் விமான கட்டணத் தொகை வழங்கப்படுகிறது. இச்செலவினங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய “தொகுப்பு (Corpus)” நிதியின் வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படுகிறது. தற்போது பல்வேறு விளையாட்டுக்களில் 230 வெற்றியாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

## படலம் – 4

## பயிற்சித் திட்டங்கள்

சிறந்த தரமான பயிற்சியாளர்களை பல்வேறு நிலைகளில் போதுமான எண்ணிக்கையில் வைத்திருப்பது விளையாட்டு மேம்பாட்டின் முக்கிய செயல் முறையாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பல்வேறு விளையாட்டுக்களில் மொத்தம் 142 பயிற்றுநர்கள் உள்ளனர்.

<table>
<tr><th rowspan="3">வ. எண்.</th><th rowspan="3">விளையாட்டுக்கள்</th><th colspan="4">தற்போதுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பயிற்றுநர்கள்</th></tr>
<tr><th rowspan="2">நிரந்தரப் பணி</th><th colspan="2">ஒப்பந்தம்</th><th rowspan="2">மொத்தம்</th></tr>
<tr><th>பட்டயப் படிப்பு</th><th>சான்றிதழ் படிப்பு</th></tr>
<tr><td>1.</td><td>அனைத்து விளையாட்டுக்கள்</td><td>109</td><td>20</td><td>13</td><td>142</td></tr>
</table>

### 4.1 பயிற்றுநர்கள் திறன் கட்டமைப்பு

பயிற்சியாளர்கள் புதிய பயிற்சி நுட்பங்களை நன்கு அறிந்து கொண்டால் மட்டுமே, தனது பயிற்சியின் மூலம் சிறந்த செயல்பாட்டினை தர இயலும். அதனடிப்படையில், ஒரு பயிற்றுநரின் செயல்பாடுகள் போதுமான கவனத்துடன் வழிநடத்தி, பயிற்சி அளித்து உன்னிப்பாக கண்காணிப்பதாகும். குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் அவர்களது செயல்திறன் தரத்தினை நிர்ணயம் செய்வதற்காக வழிகாட்டுதல் மற்றும் பயிற்றுநர்கள் பங்கு குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது.

உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும், உடற்கல்வி ஆசிரியர்கள் மூலம் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு,

பயிற்றுநர்களுக்கு முறையாக கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இது மட்டுமில்லாமல் சிறந்த பயிற்றுநர்களைத் தேர்வு செய்து வெளியிட பயிற்சி மையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

பயிற்றுநர்களின் திறன், முன்னேற்றம் மற்றும் அறிவை மேம்படுத்த சான்றிதழ் படிப்பு பயிற்சி வகுப்புகள் பல்வேறு விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன. சர்வதேச கூட்டமைப்பு பயிற்றுநர்களின் பயிற்சி படிப்புகளான கையுந்துபந்து இணையம் உதவியுடன் (FIVB) நிலை I மற்றும் நிலை II பயிற்சி வகுப்புகள், அகில இந்திய டென்னிஸ் நிலை (AITA)–I பயிற்சி வகுப்பும், (ASCA) நீச்சல் பயிற்சி வகுப்பு நிலை III , அகில இந்திய கால்பந்து 'சி' லைசன்ஸ் சான்றிதழ் பயிற்சி (AFC), சர்வதேச கூடைப்பந்து இணையம் (FIBA) நிலை I பயிற்சி வகுப்பு ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு தேசிய அளவிலான கால்பந்து பயிற்சி வகுப்பு இத்தாலியின் பயிற்றுநர் இன்டர்மிலன் கிளப் பயிற்றுநரால் நடத்தப்பட்டது.

**பன்னாட்டு அளவிலான பயிற்றுநர்கள் பயிற்சித் திட்ட விபரங்கள்**

| வ. எண் | விளையாட்டு | பெயர் மற்றும் பயிற்சி நிலை | வகுப்பு நடத்தியது | மொத்த பங்கேற்–பாளர்கள் | செலவுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | கையுந்துப்பந்து | FIVB- நிலை– I | இந்திய கையுந்துபந்து சம்மேளனம் | 10 | 4,91,000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | கையுந்து பந்து | FIVB-நிலை -II | தமிழ்நாடு மாநில கையுந்துபந்து சங்கம் | 3 பெண்கள் | 30,000/- |
| 3. | டென்னிஸ் | AITA-நிலை -1 | அகில இந்திய டென்னிஸ் சங்கம் | 4 | 53,043/- |
| 4. | வளைகோல் பந்து | வளை கோல் பந்து | ஹாக்கி இந்தியா | 14 | 75,625/- |
| 5. | நீச்சல் | ASCA-நிலை -3 | அமெரிக்க சங்கம், பெங்களூரு | 12 | 2,50,000/- |
| 6. | கூடைப்பந்து | FIBA-நிலை -1 | BFI & TNBA | 14 | 1,33,258/- |
| 7. | கால்பந்து | AFC 'C' லைசன்ஸ் | அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு | 2 | 17,460/- |

**பிற பயிற்சிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | நீச்சல் பயிற்சி | நீச்சல்குள ஆப்பரேட்டர் பயிற்சி | தமிழ்நாடு மாநில நீச்சல் சங்கம் | 42 | 2,67,308/- |
| 9. | கால்பந்து | கால்பந்து கிளினிக் | இன்டர்மிலன் FC-இத்தாலி | 17 | 51,500/- |
| 10. | நீச்சல் | நீச்சல் கிளினிக் | திரு.பிரேம் குமார், இந்திய பயிற்றுநர் | 18 | 21,455/- |

## 4.2 <u>நீச்சல்குள ஆப்பரேட்டர்கள் மற்றும் உயிர்காப்பாளர்–களுக்கான பயிற்சி</u>

நீச்சல்குள ஆப்பரேட்டர்களுக்கு நீச்சல் குளங்கள் பராமரிப்பு தொடர்பாக சிறப்பு பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. அதைத் தவிர நீச்சல்குள உயிர்காப்பாளர்களுக்கு நீச்சல் பயிற்சி பெறுபவர்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது மற்றும் உயிர் பாதுகாப்பு நுட்பங்கள் ஆகியவற்றுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

## 4.3 <u>உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி</u>

பல்வேறு விளையாட்டு விதிகள் மற்றும் விளையாடும் முறைகள் நாளுக்கு நாள் வேகமாக மாறிக் கொண்டே வருகிறது. உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் உடற்கல்வி இயக்குநர்களை நவீன விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்றவாறு மேம்படுத்த அவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியானது, மாநிலம் முழுவதும் பல்வேறு விளையாட்டுகளுக்கான கருத்தரங்குகள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. **2013–14–**ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.**14.50** இலட்சம் தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 4.4 <u>கோடை கால பயிற்சி முகாம்கள்</u>

ஒவ்வொரு ஆண்டும் **16** வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவியருக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் மாவட்டங்களில் பிரபலமாக உள்ள பிற விளையாட்டுகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கோடைகால பயிற்சி முகாம்கள் மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி முகாம் **21** நாட்கள் நடைபெறும்.

கடந்த ஆண்டில் இப்பயிற்சி முகாமில் **4314** மாணவர்கள் மற்றும் **2150** மாணவிகள் உட்பட மொத்தம் **6464** நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

கோடைகால பயிற்சி முகாம்கள் சென்னையில் உள்ள அனைத்து விளையாட்டு அரங்கங்கள், நேரு பூங்கா விளையாட்டு வளாகம் மற்றும் விளையாட்டு திடல் வசதியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சி முகாமானது இரண்டு கட்டங்களாக பதினைந்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. அதில் கடந்த ஆண்டில் **932** மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## 4.5 <u>கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள்</u>

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் உள்ள **67** கல்வி மாவட்டங்களிலும் **5** நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் பல்வேறு விளையாட்டுக்களின் அடிப்படை திறன்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு, அவரவர் திறன் ஆற்றலுக்கு ஏற்ப பல்வேறு வியைாட்டுகளில் கலந்துகொள்ள வழிவகுக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் **30,000** மாணவ / மாணவியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## **4.6** <u>மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்</u>

ஒவ்வொரு கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான **60** மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் **15** நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பங்கு பெறும் மாணவர் / மாணவியர் உலகத் திறனாளர்கள் கண்டறியும்

திட்டத்தின் வாயிலாக அவர்களது செயல்திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

### 4.7 <u>வார இறுதி பயிற்சித் திட்டம்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலின்படி 2011–2012 ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்ட வார இறுதி பயிற்சித் திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள திறனாளர்களை கண்டறிந்து முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திறனாளர்கள் கண்டறியப்பட்டு 5 விளையாட்டுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும் 20 நபர்களுக்கு முறையான பயிற்சி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு உணவு, தங்கும் வசதி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் ஆகியவற்றுக்கு ரூ.63.20 இலட்சம் மானியமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 4.8 <u>தினப்பயிற்சித் திட்டம்</u>

தினப் பயிற்சி திட்டத்தினைப் பத்து மையங்களில் செயல்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் விளையாட்டில் சிறந்து விளங்கக்கூடிய திறன் ஆற்றல் மிக்க 10 முதல் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் ஒவ்வொரு விளையாட்டிலும் 20 நபர்கள் விளையாட்டுத் திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்–கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு காலை மற்றும் மாலை வேளைகளில், வாரத்தில் ஐந்து நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக உணவு, போக்குவரத்து செலவு, சீருடை, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளும் செலவினங்களுக்கு ரூ.18.00

இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் தினசரி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| **வ. எண்** | **மாவட்டத்தின் பெயர்** | **விளையாட்டுகள்** | **பயிற்சியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 1) தடகளம்<br>2) நீச்சல் | 20 நபர்கள்<br>20 நபர்கள் |
| 2. | காஞ்சிபுரம் | 3) நீச்சல்<br>4)வளைகோல் பந்து | 20 நபர்கள்<br>20 நபர்கள் |
| 3. | நீலகிரி | 5)கால்பந்து | 20 நபர்கள் |
| 4. | சேலம் | 6) தடகளம் | 20 நபர்கள் |
| 5. | விழுப்புரம் | 7) தடகளம் | 20 நபர்கள் |
| 6. | தருமபுரி | 8) இறகுப்பந்து | 20 நபர்கள் |
| 7. | சென்னை– மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம் | 9) வளைகோல் பந்து | 20 நபர்கள் |
| 8. | சென்னை | 10) கால்பந்து | 20 நபர்கள் |

## படலம் – 5

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

### 5.1 கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

தமிழ்நாடு சட்டமன்றத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, 12524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.25.05 கோடியினை அரசு ஒப்பளித்துள்ளது. ஊரகப் பகுதி மக்களிடையே விளையாட்டில் ஊக்கமளிக்கும் வகையில் தடகளம், கையுந்துப்பந்து, கபாடி மற்றும் கால்பந்து ஆகிய விளயைாட்டுக்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கிராமங்களில் உள்ள விளையாட்டு கட்டமைப்புகள் வசதிகளையும் மற்றும் பைக்கா திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளையும் முறையாக பயன்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலை உறுதிப்படுத்துவதற்காக கிராம விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

### 5.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

மாவட்டங்களில் பல்வேறு வயது பிரிவினரிடையே தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கோ–கோ, நீச்சல், டேக் வோண்டோ

மற்றும் கையுந்துபந்து ஆகியவற்றில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.25.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

## 5.3 <u>அண்ணா சைக்கிள் போட்டி</u>

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15–ம் நாள் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பங்கேற்பவர்களுக்கும் வெற்றி பெற்றவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 இலட்சம் அரசு ஒப்பளித்து வருகிறது.

## 5.4 <u>இந்திய அரசின் “பைக்கா” (PYKKA) திட்டத்தின் கீழ் போட்டிகள் நடத்துதல்</u>

இந்திய அரசு “பைக்கா” திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கிராம ஒன்றியங்கள் மற்றும் கோட்ட அளவில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தின் கீழ் 16 வயதிற்குட்பட்ட கிராம சிறுவர்கள் / சிறுமியர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் கோட்டம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பைக்கா விளையாட்டுப் போட்டிகள் கீழ்குறிப்பிட்ட காலங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| அ) | கோட்ட அளவிலான | ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் |

| | | |
|---|---|---|
| | விளையாட்டுப் போட்டிகள் | மாதம் 20–ம் தேதிக்கு முன்னர் நடத்தப்படுகிறது |
| ஆ) | மாவட்ட அளவிலான போட்டிகள் | நாடு முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலான போட்டிகளின் நிறைவு நாள் தேசிய விளையாட்டுத் தினமான ஆகஸ்ட் 29–ம் தேதி நடத்தப்பட்டு வருகிறது |
| இ) | மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் | ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்திற்குள் நடத்தப்பட்டு வருகிறது. |
| ஈ) | தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் | ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடத்தப்பட்டு வருகிறது (பிரிவு வாரியாக). |

**2013–14 ம் ஆண்டிற்கான பைக்கா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் நடைபெற்ற 6வது தேசிய அளவிலான போட்டிகளின் செயல்திறன் விவரம்**

| | | |
|---|---|---|
| பளுதூக்குதல் | சிறுவர் | 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் |
| பளுதூக்குதல் | சிறுமியர் | 1 தங்கம் மற்றும் 2 வெண்கலம் |
| ஜுடோ | சிறுவர் | 2 வெண்கலம் |
| ஜுடோ | சிறுமியர் | 1 வெண்கலம் |
| மேசை பந்து | சிறுவர் | 1 தங்கம் |
| மேசை பந்து | சிறுமியர் | 1 தங்கம் |
| இறகு பந்து | சிறுமியர் | 1 தங்கம் |
| குத்துச் சண்டை | சிறுவர் | 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் |
| குத்துச் சண்டை | சிறுமியர் | 1 வெள்ளி மற்றும் |

| | | |
|---|---|---|
| | | 5 வெண்கலம் |
| கூடைப்பந்து | சிறுவர் | 1 தங்கம் |
| கூடைப்பந்து | சிறுமியர் | 1 வெள்ளி |

**5.5 தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகள்**

மத்திய அரசு 2013–14 ஆம் ஆண்டில் பைக்கா திட்டத்தின் கீழ் தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளுக்கான கீழ் நிலை விளையாட்டுப் போட்டிகளை (மாவட்ட / மாநில அளவில்) நடத்திட ரூ.44.40 இலட்சம் விடுவித்துள்ளது. டிசம்பர் 31–ஆம் தேதியன்று 25 வயதுக்குட்பட்ட பெண்கள் இப்போட்டியில் பங்கேற்க தகுதியானவர்களாவார்கள்.

கீழ்காணும் 12 விளையாட்டுக்களில் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன.

| வ.எண். | தொகுதி | விளையாட்டு |
|---|---|---|
| 01 | தொகுதி – 1 | கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல் |
| 02 | தொகுதி – 2 | கைப்பந்து, வளைகோல்பந்து, டென்னிஸ் |
| 03 | தொகுதி – 3 | தடகளம், இறகுபந்து மற்றும் மேசைப்பந்து |
| 04 | தொகுதி 4 | கபாடி, கோ–கோ மற்றும் கையுந்துப்பந்து |

தொகுதி–1, தொகுதி–2, தொகுதி–3 மற்றும் தொகுதி–4 ஆகிய பிரிவுகளில் ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்திய விளையாட்டு ஆணையம் நடத்தும் தேசிய அளவிலான மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க

அனுமதிக்கப்படுவர். 2013–14 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அணியின் செயல்திறன் குறித்த கீழ்க்காணும் விவரம்

**2013–14 ஆம் ஆண்டிற்கான 39வது தேசிய மகளிர் விளையாட்டு விழா போட்டிகள்**

| | | |
|---|---|---|
| மேசைப்பந்து | குழு போட்டிகள் | தங்கம் |
| மேசைப்பந்து | ஒற்றையர் | தங்கம் |
| மேசைப்பந்து | இரட்டையர் | தங்கம் |
| இறகுபந்து | ஒற்றையர் | வெள்ளி |
| இறகுபந்து | இரட்டையர் | தங்கம் |
| புல்வெளி டென்னிஸ் | குழு போட்டிகள் | வெண்கலம் |
| கூடைப்பந்து | குழு போட்டிகள் | வெண்கலம் |
| நீச்சல் | ஒற்றையர் | 6 தங்கம், 4 வெள்ளி, மற்றும் 3 வெண்கலம் |
| தடகளம் | ஒற்றையர் | 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் |

ஒட்டு மொத்த வாகையர் – தமிழ்நாடு இரண்டாவது இடம்

## 5.6 மாநில விளையாட்டு கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டு அணிகளை பங்கேற்கச் செய்வதற்கும், மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்துவதற்கும் மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

## 5.7 பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துதல்

சர்வதேச போட்டிகளை சென்னையில் / தமிழ்நாட்டில் நடத்துவதை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் / தேசிய விளையாட்டு இணையங்கள் ஆகியவற்றிற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 5.8 பிடே உலக வாகையர் போட்டி 2013

சென்னையில் பிடே உலக சதுரங்க வாகையர் போட்டி இந்தியாவைச் சார்ந்த உலக சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்திற்கும், நார்வே நாட்டைச் சார்ந்த மாக்னஸ் கார்ல்சென்–க்கும் இடையே 2013 நவம்பர் 7 முதல் 25 வரை கோலகலமாக நடைபெற்றது. 7.11.2013 நடைபெற்ற துவக்க விழாவில் கண்கவரும் வகையில் பல்வேறு குழுக்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குலுக்கல் முறையில் முதலில் விளையாடுபவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இம்மாபெரும் போட்டியினை வெற்றிகரமாக நடத்திட மாநில அரசு சிறப்பு மான்யமாக ரூ.29.15 கோடியினை ஒப்பளிப்பு செய்தது.











## 5.9 முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகள்

அரசு ஆணையின்படி, மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் மூன்று நிலைகளில் முறையே, மாவட்ட அளவில், மண்டல அளவில் மற்றும் மாநில அளவில் 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல் பந்து, கபாடி, நீச்சல், மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் கையுந்துபந்து ஆகியற்றில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் மண்டலங்களில் நடத்தி முடிக்கப்பட்டன.

ஒவ்வொரு குழு விளையாட்டிலும் சிறந்த குழு தேர்ந்தெடுக்கப்பட்டு மண்டல அளவிலான போட்டிகள் 4 மண்டலங்களில் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் 8 மாவட்ட அணிகள் பங்கேற்றன. மண்டல அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் நாக் அவுட் மற்றும் லீக் அடிப்படையில் நடத்தப்பட்டன. மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் லீக் மற்றும் நாக் அவுட் அடிப்படையில் தேசிய போட்டிக்கு இணையாக வெகு விரைவில் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு தொகையாக ரூ.1000/–, ரூ.750/– மற்றும் ரூ.500/– முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மண்டல அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு தொகையாக ரூ.5000/–, ரூ.3000/– மற்றும் ரூ.2000/– முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு பரிசாக வழங்கப்படுகிறது.

மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு பரிசு தொகையாக ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/– முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திடவும், பரிசுத் தொகை வழங்கவும் ரூ809.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 5.10 படிவம் II சான்றிதழ் வழங்குதல்

தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கும் வெற்றி பெறுபவர்களுக்கும் அவர்கள் பெற்ற அசல் சான்றிதழ்களை சரிபார்த்து படிவம் – 2 சான்றிதழ்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் அவர்களால் சான்றளிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இந்த சான்றிதழ்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் உயர்கல்வி பயில மிகவும் உதவியாக இருக்கும்.

## 5.11 சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள்

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் பெருமைமிக்க சென்னை (ஏடிபி) ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள டென்னிஸ் விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு ரூ.2.00 கோடியினை அரசு பங்களிப்பாக வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடத்தப்படும் இந்த

சர்வதேச டென்னிஸ் போட்டிகள் உலகத்தர வரிசையில் முன்னணியில் உள்ள வீரர்களை கவர்ந்துள்ளது.

### 5.12 <u>அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடத்துதல்</u>

மத்திய குடிமுறை அரசுப் பணிகள் கலை மற்றும் விளையாட்டு வாரியம், பல்வேறு மாநிலங்களில், அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் அம்மாநிலங்களில் நடத்திட ஒதுக்கீடு செய்து வருகிறது. அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணிகள் கலந்து கொண்டுள்ளது. 2013–14 ம் ஆண்டு அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களுக்கான டென்னிஸ் விளையாட்டுப் போட்டியினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இவ்விளையாட்டுப் போட்டிகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் டென்னிஸ் விளையாட்டு அரங்கில் 18.01.2014 முதல் 23.01.2014 வரை நடத்தப்பட்டன. இதில் மொத்தம் 22 மாநிலங்கள் / நிறுவனங்களைச் சார்ந்த 149 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

### 5.13 <u>மாநில அளவில் அரசு பணியாளர்களுக்கான விளையாட்டு போட்டிகள்</u>

2013–14–ம் ஆண்டு தமிழக அரசுப் பணியாளர்களின் உடல் தகுதியை மேம்படுத்தவும், ஆரோக்கிய வாழ்விற்காகவும் அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இந்த அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மாவட்ட அளவில் தடகளம், இறகுப்பந்து,

கூடைப்பந்து, டென்னிஸ், கபாடி, மேசைப்பந்து, கையுந்துப்பந்து மற்றும் கால்பந்து ஆகிய விளையாட்டுக்களில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த விளையாட்டுப் போட்டியினை நடத்திட ரூ.40.37 இலட்சம் அரசு ஒப்பளித்துள்ளது.

## 5.14 <u>மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்</u>

கேரம் விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக ரூ.6.45 லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த விளையாட்டுப் போட்டியினை மிக இளையோர் மற்றும் இளையோர் என இரு பிரிவுகளாக பிரித்து நடத்தப்பட்டு வருகிறது (ஐந்தாம் வகுப்பு வரை பயிலும மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆறாம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள்).

## 5.15 <u>மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள்</u>

இப்போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் மாற்றுத் திறனாளிகளிடையே நம்பிக்கையூட்டவும், அவர்களிடையே போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கவும் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது. கீழ்க்காணும் வகையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

1. **மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் (ஆடவர் மற்றும் மகளிர்)**

அ. 50 மீ ஓட்டம்
ஆ. 100 மீ ஓட்டம்
இ. நீளம் தாண்டுதல்

ஈ. சிறிய கூடைப்பந்து எறிதல்
உ. 100 மீ சக்கர நாற்காலி ஓட்டம்

**2. கண்பார்வையற்றோருக்கான விளையாட்டுப் போட்டிகள் (ஆடவர் மற்றும் மகளிர்)**

அ. 50 மீ ஓட்டம்
ஆ. 100 மீ ஓட்டம்
இ. நின்றவாறு குதித்தல்
ஈ. குண்டு எறிதல்
உ. டென்னிஸ் பந்து எறிதல்

**3. மூளை வளர்ச்சி குன்றியோருக்கான விளையாட்டுப் போட்டிகள் (ஆடவர் மற்றும் மகளிர்)**

அ. 50 மீ ஓட்டம்
ஆ. 100 மீ ஓட்டம்
இ. மட்டைபந்து எறிதல்
ஈ. நின்றவாறு குதித்தல்
உ. குண்டு எறிதல்

**4. காது கேளாதவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் (ஆடவர் மற்றும் மகளிர்)**

அ. 100 மீ ஓட்டம்
ஆ. 200 மீ ஓட்டம்
இ. நீளம் தாண்டுதல்
ஈ. குண்டு எறிதல்
உ. ஈட்டி எறிதல்

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.5,000/–, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.3,000/–, மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.2,000/– பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட, அரசு ரூ.15.01 லட்சம் ஒப்பளித்துள்ளது.

## 5.16 மாற்றுத் திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்

மாற்றுத் திறனாளர்களுக்கு நம்பிக்கை மற்றும் ஒருங்கிணைந்து செயல்படும் திறனை மேம்படுத்தவும் மாநில அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்காணும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

- **கை, கால் ஊனமுற்றோர் (ஆடவர் மற்றும் மகளிர்)**
  1. இறகுப்பந்து (ஒற்றையர் மற்றும் இரட்டையர்) – ஒரு அணிக்கு 5 வீரர்கள்
  2. மேசைப்பந்து – ஒரு அணிக்கு இரு வீரர்கள்
- **பார்வை குறைபாடுயுடையோர் (முழுவதும் பார்வையற்றோர், ஓரளவு பார்வையுடையோர் (ஆடவர் மற்றும் மகளிர்)**
  1. அடாப்டட் கையுந்து பந்து – ஒரு அணிக்கு 7 வீரர்கள்
- **மனவளர்ச்சி திறனாளிகள் (மனவளர்ச்சி குன்றியோர்) (ஆடவர் மற்றும் மகளிர்)**
  1. எறிபந்து – ஒரு அணிக்கு 7 வீரர்கள்
- **செவி திறன் குறைபாடுயுடையோர் (காது கேளாதோர்) (ஆடவர் மற்றும் மகளிர்)**
  1. கபாடி – ஒரு அணிக்கு 7 வீரர்கள்

மேற்காணும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.30.00 லட்சம் அரசு ஒப்பளித்துள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிகள் 14.02.2014 முதல் 16.02.2014 வரை மதுரையில் நடத்தப்பட்டன.

### 5.17 <u>கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டுப் போட்டிகள்</u>

கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டுகளில் பாரம்பரியமாக ஈடுபாடு உள்ள கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களை அவ்விளையாட்டுக்களில் ஊக்கப்படுத்தும் வகையில், கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர் சமூக குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து சத்துணவு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தி பதக்கங்கள் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், இந்த நீர் விளையாட்டுப் போட்டி மையம், நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு வளாகத்திலும், கழைக்கூத்து பயிற்சியினை ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.18 <u>கடற்கரை விளையாட்டுப் போட்டிகள்</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் காஞ்சீபுரம் ஆகிய மாவட்டங்களின் கடற்கரை பகுதிகளில் கடற்கரை கால்பந்து, கடற்கரை கபாடி மற்றும் கடற்கரை கையுந்து பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ஒப்புதல் அளித்துள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.2.00 லட்சம் செலவில் விளையாட்டு மைதான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த 10 மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான குழுக்கள்

அமைக்கப்பட்டு இவ்வசதிகள் அவர்களால் முறையாக பயன்படுத்தப்படுகிறது. கடலோர மாவட்டங்களிலுள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.19 <u>மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்</u>

அரசாணை (நிலை) எண்.64 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (எஸ்–2) துறை, நாள் 16.7.2013–ல் 2013–14–ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான மற்றும் மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.1.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழகங்களுக்கு இடையே கீழ்காணும் விளையாட்டுக்களில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

1. தடகளம்
2. இறகுப்பந்து
3. கூடைப்பந்து
4. கால்பந்து
5. வளைகோல் பந்து
6. கபாடி
7. மேசைப்பந்து
8. டென்னிஸ்
9. கையுந்துபந்து

நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் ஏற்கனவே நடத்தப்பட்டன. மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில்,

அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்களுக்கிடையே நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள் கலந்து கொள்ளும் மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் முதல் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.10,000/–, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.7,500/–, மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.5,000/–மும் பரிசுத் தொகை வழங்கப்படும்.

## 5.20 <u>தமிழகத்தில் தீவிரவாதம் கண்டறியப்படும் இடங்களில் உள்ள இளைஞர்களை ஒழுங்குபடுத்த மையங்களை நிறுவுதல்</u>

அரசாணை (நிலை) எண்.47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்–2) துறை, நாள் 30.5.2013–ல் தமிழகத்தில் தீவிரவாதம் கண்டறியப்பட்ட இடங்களைச் சார்ந்த இளைஞர்களை சுய ஒழுக்கத்துடன் நல்வழிப்படுத்திடவும், ஒழுங்குப்படுத்திடவும், நேர்மறை மனப்பாங்கு மற்றும் முன்னேற்ற சிந்தனை உள்ளவர்களாக்கவும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.17.20 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 104 மையங்கள் அமைக்கப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்கவும் மற்றும் போட்டிகள் நடத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளைஞர்கள் விளையாட்டுக்களில் தொடர்ந்து பங்கேற்கவும், ஊக்கப்படுத்தவும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள மையங்களில் இப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## படலம்– 6

## உதவித் தொகை, விருதுகள் மற்றும் ஊக்கத் தொகை

பல்வேறு பிரிவுகளில், பல்வேறு நிலைகளில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை, விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

### 6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய ஊக்க உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களில் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்கு அவர்களது விளையாட்டுச் சாதனையின் அடிப்படையில் முறையே ரூ.10000/–ம் மற்றும் ரூ.13000/– வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2011–2012ஆம் ஆண்டில் 386 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ரூ.43,25,000/– வழங்கப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டில் 468 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ரூ.52,98,000/– வழங்கப்பட்டது.

## 6.2 <u>தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்</u> (ஒலிம்பிக்ஸ் மற்றும் பன்னாட்டுப் போட்டிகளை நோக்கி)

2011–2012ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மான்யக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிய திட்டமாக **“தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்”** செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டமானது விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லக் கூடிய 5 தலைசிறந்த ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீரர்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சம் வீதம் 5 ஆண்டுகளுக்கு **‘தேவைக்கேற்ப உதவிகள்’** செய்து, அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பெருமை சேர்க்கும் விதத்தில் வெற்றி பெற வழி வகுக்கும்.

கீழ்க்காணும் 5 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, கடந்த 16.4.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

1. திரு. கே. பிரேம்குமார், தடகளம் (நீளம் தாண்டுதல்)
2. செல்வி. ஜி. காயத்ரி, தடகளம் (100மீ தடை ஓட்டம்)
3. செல்வி. ஏ. வி. ஜெயவீணா, நீச்சல்
4. திரு. ஜி. சத்தியன், மேசைப்பந்து
5. செல்வி. ஐஸ்வர்யா செழியன், பாய்மரப்

படகோட்டுதல்

மேற்காணும் விளையாட்டு வீரர்களின் விளையாட்டு செயல்திறனை காலமுறையில் கண்காணித்து மதிப்பீடு செய்ய கண்காணிப்பு மற்றும் வழிநடத்தும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்களின் வல்லுநர்கள் மற்றும் விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இக்குழுக் கூட்டத்தில், விளையாட்டு வல்லுநர்கள், விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகள், ஊட்ட உணவு நிபுணர், வீடியோ பகுப்பாய்வு நிபுணர், விளையாட்டு அறிவியல் மற்றும் காயங்கள் தொடர்பான மருத்துவர் ஆகியோர் நடந்து முடிந்த பல்வேறு கூட்டங்களில் கலந்து கொண்டு, தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு அவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைசிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகளது விளையாட்டுத் திறன் திருப்திகரமாக இல்லையெனக் கண்டறியப்பட்டால் அவர்களுக்குப் பதிலாக உயர்மட்டக் குழுவினரால் வேறு ஒரு சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனையைக் கொண்டு மாற்றப்படுவர்.

## 6.3 <u>வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகை வழங்குதல்</u>

உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் வளரும் திறனாளர்கள் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500.00 வீதம் ஆண்டொன்றுக்கு தலா ரூ.6,000/– ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு 2013 – 14ம் ஆண்டில் ரூ.194.40 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**6.4 உயரிய ஊக்கத் தொகை**

ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்க அரசாணை எண்.5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள்.24.1.2012–ன் மூலம் அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் மேலும் பல பதக்கங்கள் வெல்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்திட உயரிய ஊக்கத் தொகையை கீழ்க்கண்டவாறு அரசாணை எண்.38, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.19.12.2011 ல் உயர்த்தியுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | சர்வதேச போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண் கலம் |
| 1 | ஒலிம்பிக் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) – தனிநபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | 200.00 | 100.00 | 50.00 |
| 2 | ஆசிய போட்டிகள் (4 ஆண்டு–களுக்கு ஒரு முறை) – தனி நபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | 50.00 | 30.00 | 20.00 |
| 3 | காமன்வெல்த் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) – தனி நபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | 50.00 | 30.00 | 20.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | தெற்காசிய போட்டிகள் – (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)<br>**தனிநபர் போட்டிகள்** | 5.00 | 3.00 | 2.00 |
| | **குழுப் போட்டிகள்** (ஒவ்வொரு வீரருக்கும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 5 | தேசிய போட்டிகள்<br>(2 ஆண்டுகளுக்கு ஒரு முறை)<br>**தனிநபர் போட்டிகள்** | 5.00 | 3.00 | 2.00 |
| | **குழுப் போட்டிகள்** (ஒவ்வொரு வீரருக்கும்) | 5.00 | 3.00 | 2.00 |

உலக சதுரங்க போட்டிகளில் 5 முறை (2000, 2007, 2008, 2010 மற்றும் 2012) சாம்பியன் பட்டம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் உயரிய ஊக்கத் தொகைக்கு இணையாக சிறப்பு விருதாக ரூ.2.00 கோடி வழங்கப்பட்டது.

## 6.5 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

அரசாணை (நிலை) எண்.42, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.21.12.2011–ன்படி, நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியத் தொகை மாதத்திற்கு ரூ.1000/–லிருந்து ரூ.3000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இன்றைய தேதியில், தற்போது 65 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியமும், 6 நபர்கள் குடும்ப ஓய்வூதியமும் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்கான செலவினம் மாதந்தோறும் தலா ரூ.3000/– வீதம் 71 நபர்களுக்கு ரூ.2,13,000/–.

## 6.6 விளையாட்டு வீரர்கள் நல நிதி

விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் சமயங்களில், உயிரிழந்த அல்லது காயம் அடைந்த விளையாட்டு வீரர்கள், அவர்கள் மறுவாழ்வு / சிகிச்சை பெறும் வகையில் விளையாட்டு வீரர்கள் நல நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 6.7 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் பொறியியல் கல்லூரிகளில் **500** இடங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் **3** இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம், கடந்த **3.7.2012** முதல் நடைமுறையில் உள்ளது.

**சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் இடஒதுக்கீடு**

| வ. எண் | நிறுவனங்கள் விவரம் | இட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக் கழகம், சென்னை –25 | 12 இடங்கள் |
| 2 | அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 13 இடங்கள் |
| 3 | அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் | 14 இடங்கள் |
| 4 | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 461 இடங்கள்<br>தலா ஒரு கல்லூரிக்கு 1 இடம் வீதம் |
| மொத்தம் இடங்கள் | | 500 இடங்கள் |

**6.8 <u>முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது</u>**

ஒவ்வொரு ஆண்டும், சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள், (2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள்), பயிற்றுநர்கள் 2 உடற்கல்வி ஆசிரியர்கள் (1 ஆண் மற்றும் 1 பெண்) ஆகியோருக்கு அவர்களது பணியினை அங்கீகரிக்கும் வகையில் ரூ.1.00 இலட்சத்துடன் கூடிய பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை உள்ளடக்கிய முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது.

**6.9 <u>பயிற்றுநர்கள் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோரின் அறிவாற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்</u>**

திறமையான பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு சர்வதேச அளவிலான குறுகிய கால பயிற்சி / சர்வதேச பயிற்சி ஆகியவற்றின் மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் அளவுகளை மேம்படுத்த ரூ.30.00 இலட்சம் 2013–14–ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**6.10 <u>மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு</u>**

மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம், 2–ம் இடம் மற்றும் 3–ம் இடங்களில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு முறையே ரூ.1200/–, ரூ.800/– மற்றும் ரூ.400/– ஆக உயர்த்தப்பட்ட பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2013–2014–ஆம் ஆண்டில் 4338 மாணவர்களுக்கு ரூ.30,04,800/– பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## <u>படலம்–7</u>

## <u>விளையாட்டுக் கட்டமைப்பு</u>

விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை வெற்றியாளர்களாக உருவாக்குவதற்கு உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பு இன்றியமையாத தேவையாகும். கடந்த 1995–ம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது, சென்னையில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புகளான பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவைகளை அமைத்த பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையே சாரும். மேலும், தனி முத்திரை பதித்துள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993–ஆம் ஆண்டில் 234 நாட்களிலேயே கட்டி முடிக்கப்பட்ட சாதனைக்குரியது. 2013 ஆம் ஆண்டு ஜவஉறர்லால் நேரு விளையாட்டு அரங்கம் அருகில், உலகத்தரத்திலான பயிற்சி தடகள ஒடுதள பாதையுடன் கூடிய இயற்கைபுல் கால்பந்து மைதானம் நிறுவப்பட்டுள்ளது. தற்சமயம் இவ்விளையாட்டு வசதிகள் யாவும் விளையாட்டு வீரர்கள் பெருமளவில் பயன்படுத்தி பல்வேறு நிலைகளில் வெற்றி வாகை சூடி சாதனை புரிந்திட உதவுகிறது. ஊரக மற்றும் நகர்புறங்களில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தித் தரும் வகையில் விளையாட்டுக் கட்டமைப்புகளை மாவட்டங்களில் அரசு உருவாக்கி வருகிறது.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் குறித்த விவரங்கள் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளன.

## 7.1 <u>மாநிலத்தில் உள்ள பெரிய விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்</u>

### 7.1.1 ஜவஉறர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

முத்திரைச் சின்னமாக திகழும் ஜவஉறர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993–ம் ஆண்டு ரூ.44 கோடி செலவில் 234 நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டது. இவ்விளையாட்டரங்கம் 40,000 நபர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. 8 பாதை கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை தடகள ஓடுதளத்துடன், மையத்தில் இயற்கை புல் கால்பந்து மைதானம் கொண்டது. இது தவிர, ஜுடோ, பளுதூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம் மற்றும் கேரம் ஆகியவற்றிற்கான விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு கடற்கரை கையுந்துபந்து திடல்கள், மூன்று களிமண் தரையிலான கையுந்துபந்து திடல்கள் (ஒளி வெள்ள வசதியுடன்), ஒரு எறிபந்து திடல், ஒரு கபாடி மைதானம் மற்றும் ஒரு கைப்பந்து திடல் ஆகிய வசதிகளும் இவ்விளையாட்டு வளாகத்தில் உள்ளன. மேலும், குளிர் சாதன வசதி கொண்ட உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம் இச்சீர்மிகு விளையாட்டரங்கில் உள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.1780.63 இலட்சம் செலவில் ஜவஉறர்லால் நேரு விளையாட்டு அரங்கம் சீரமைக்கப்பட்டு, அங்குள்ள செயற்கை இழை தடகள ஓடுதள பாதை, இயற்கைபுல் கால்பந்து மைதானம் புதுப்பிக்கப்–பட்டதுடன், மின்னொளி விளக்குகள் மாற்றி அமைத்தல், கூட்ட அரங்கம் மற்றும் அலுவலக அறைகள் முதலான வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

### 7.1.2 நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை

1995–ஆம் ஆண்டு ரூ.20 கோடி செலவில் அமைக்கப்பட்ட நேரு உள்விளையாட்டரங்கம் 8,000 நபர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. இவ்விளையாட்டரங்கம் முழுமையாக குளிர் சாதன வசதி கொண்டது. ஒளி வெள்ள வசதியுடன் கூடிய மரத்தளம் அமையப் பெற்றது. இங்கு கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுபந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், சதுரங்கம், கேரம், கைப்பந்து மற்றும் இதர விளையாட்டுக்கள் விளையாடலாம். மேலும், இவ்விளையாட்டு வளாகத்தில் ஒளி வெள்ள வசதி கொண்ட சறுக்கு விளையாட்டு தளம், ஒளி வெள்ள வசதி கொண்ட இரண்டு கான்கிரீட் கூடைப்பந்து திடல்கள், களிமண் கைப்பந்து திடல், ஒளி வெள்ள வசதி கொண்ட வாள்சண்டை அரங்கம் மற்றும் திறந்த வெளி குத்துச்சண்டை திடல் ஆகிய வசதிகள் உள்ளன. 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி செலவில் குளிர்சாதன வசதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ. 283.35 இலட்சம் செலவில் மகளிருக்கான சிறப்பு விளையாட்டு விடுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக வாகையர் சதுரங்க போட்டியின் கோலாகலமான துவக்க விழா நவம்பர் 2013–ஆம் ஆண்டு இவ்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

### 7.1.3 மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை

8670 நபர்கள் அமரும் வசதி கொண்ட இந்த விளையாட்டரங்கம் 1995–ஆம் ஆண்டு ரூ.8.00 கோடி செலவில் கட்டப்பட்டது. சர்வதேச தரத்திலான ஒளி வெள்ள வசதியுடன் கூடிய செயற்கை இழை ஹாக்கி ஆடுகளம் இங்கு உள்ளது. இது தவிர, நான்கு டென்னிஸ் திடல்கள் (களிமண்), ஒளி வெள்ள வசதி கொண்ட மூன்று கையுந்துபந்து திடல்கள் மற்றும் ஒரு உடற்பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகள் உள்ளன.

செயற்கை இழை ஹாக்கி ஆடுகளம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படவுள்ளது.

### 7.1.4 நீச்சல் குள வளாகம், வேளச்சேரி சாலை, சென்னை

இந்த வளாகம் 1995–ஆம் ஆண்டு ரூ.11.32 கோடி செலவில் கட்டப்பட்டது. 4,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் உள்ள இவ்வளாகத்தில் சர்வதேசத் தரத்திலான 8 பாதையுடன் கூடிய 50மீ x 25மீ பந்தய நீச்சல் குளம், 18மீ x 25மீ குதித்தல் குளம் மற்றும் 25மீ x 25மீ பயிற்சி நீச்சல் குளம் உள்ளன. இவ்வசதிகள் மட்டுமல்லாமல், ஒரு உடற்பயிற்சிக் கூடம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டிற்கான உள்ளரங்கம் ஆகிய வசதிகளும் உள்ளன. மேலும் இவ்வளாகத்தில் ஒரு பல்நோக்கு விளையாட்டு அரங்கம் ரூ.1.50 கோடி செலவில் தற்சமயம் நிறுவப்பட்டுள்ளது.

### 7.1.5 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை

7,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதிகொண்ட இந்த விளையாட்டரங்கம் 1995ஆம் ஆண்டு ரூ.7.50 கோடி செலவில் கட்டப்பட்டது. இவ்வளாகத்தில் முதன்மை விளையாட்டரங்கில் ஒரு மையத் திடலும், வெளியே 6 பயிற்சித் திடல்களும் ஒளி வெள்ள வசதியுடன் உள்ளன. அனைத்துத் திடல்களும் சர்வதேச தரத்திலான செயற்கை மேற்பரப்பு கொண்டவையாகும். உடற்பயிற்சிக் கூடம் ஒன்றும் இவ்விளையாட்டரங்கில் உள்ளது. இவ்விளையாட்டரங்கம் முழுவதும் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு மற்றும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.1.6 செனாய் நகர் நீச்சல் குளம், சென்னை

இவ்வளாகத்தில் ஒரு நீச்சல் குளம் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு நீச்சல் குளம் உள்ளன. இது தவிர, 2012–ஆம் ஆண்டு மரத்தாலான ஆடுகளம் கொண்ட இறகுபந்து உள் விளையாட்டரங்கம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

### 7.1.7 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள் தவிர, அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து விளையாட்டு வளாகங்களிலும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து போன்ற விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகள் உள்ளன. இதர விளையாட்டுகளுக்கான வசதிகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை அமைத்திட வேண்டும் என்ற முனைப்புடனும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள்விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகிய வசதிகளை அமைக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 7.1.8 பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள்

சென்னை மட்டுமல்லாது, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.14.30 கோடி செலவினத்தில் திருவாரூர், திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டரங்கங்கள்

இறகுபந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, டேக்வாண்டோ, கைப்பந்து, கபாடி, வாள்சண்டை மற்றும் இதர விளையாட்டுக்களில் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் பயிற்சி பெற வழிவகை செய்யும். சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவற்றிலும் உள் விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. மேலும், ஸ்ரீரங்கம் (திருச்சி), அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள் விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

### 7.1.9 செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் வளைகோல் பந்து புல் மைதானம்

செயற்கை இழை தடகள ஓடுபாதைகள் சென்னை ஜவஉறர்லால் நேரு விளையாட்டு அரங்கத்திலும் மற்றும் பயிற்சி ஓடுதள பாதை பகுதியிலும் உள்ளன. இது மட்டுமின்றி, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளன. திருச்சிராப்பள்ளியில் ரூ.6.00 கோடி செலவில் மின்னொளி வசதியுடன் கூடிய செயற்கை இழை தடகள ஓடுபாதையும், திருநெல்வேலியில் ரூ.3.50 கோடி செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயற்கை புல் வளைகோல்பந்து மைதானங்கள் சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ வளாகம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இது மட்டுமல்லாமல், ரூ.6.00 கோடி செலவினத்தில் மதுரையில் செயற்கை புல் வளைகோல்பந்து மைதானம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. ரூ.7.00 கோடி செலவில் கோவில்பட்டியில் செயற்கை புல் வளைகோல்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க அரசு அறிவித்துள்ளது.

### 7.1.10 நீச்சல் குளங்கள்

தற்போது, 23 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் உள்ளன. இது தவிர நாமக்கல் , தேனி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7.2 கட்டமைப்புகள் பராமரித்தல்

மாவட்டங்களில் தற்பொழுது உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை பராமரிக்கவும், சீரமைக்கவும் 2013–2014–ஆம் ஆண்டு ரூ.5.00 கோடி ஒரு முறை சிறப்பு மான்யமாக அரசு வழங்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## <u>படலம் – 8</u>

### 8.1 <u>முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம் திட்டம்</u>

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடிமக்களும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ வைக்கும் பொருட்டு இத்திட்டம் வகைசெய்யும். இத்திட்டத்தின் இலக்கு குழந்தைகள், இளைஞர்கள், முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளிகள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் ஆகும். வழக்கமான உடல் செயல்பாடு மற்றும் உடற்பயிற்சி குறித்து விழிப்புணர்ச்சி உருவாக்குதல், அனைத்து மக்களையும் விளையாட்டில் ஈடுபடுத்துதல், மேலும் பல்வேறு துறைகள் / நிறுவனங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வளங்களை இணைத்து இத்திட்டத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் துவக்கமாக, 17 மாவட்ட விளையாட்டு வளாகங்களில் நவீன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடம் அமைக்கப்படும். அரசு ஊழியர்களிடையே உடற்பயிற்சி கலாச்சாரத்தினை ஊக்குவித்திட, தலைமைச் செயலகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என தனித்தனியே உடற்பயிற்சிக்கூடம் ரூ.50.00 லட்சம் செலவில் அமைக்கப்படும்.

## படலம் – 9

## இளைஞர் நலத் திட்டங்கள்

### 9.1 இளைஞர் நல இயக்குநரகம் அமைத்தல்

அரசாணை நிலை எண்.56, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (இந) துறை, நாள்.2.7.2013–ல் இளைஞர்களை முறையாக நெறிப்படுத்தி செயல்படுத்தவும், ஆளுமை திறனை உயர்த்தவும் ஒட்டு மொத்த நலனில் உதவி புரியவும் அவர்களை கண்காணிப்பதற்காகவும் இளைஞர் நல இயக்குநரகம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 40 விழுக்காடு 15 முதல் 35 வயதுடைய இளைஞர்களை உள்ளடக்கியுள்ளது. இப்பிரிவினர், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மிகவும் துடிப்பான, ஆற்றல் மிக்க பகுதியினராகவும் மாநிலத்தின் வளமான மனித சக்தியாகவும் உள்ளனர். இளைஞர்களது சக்தியினை ஒருமுகப்படுத்தி அவர்களது திறமைகளை நெறிப்படுத்தி அவர்களை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள இளைஞர் நல இயக்குநரகம் மூலம் கீழ்க்காணும் இளைஞர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

அ. இளைஞர்கள், அவர்களது நலன்கள், பயிற்சிகள் மற்றும் எதிர்கால வாய்ப்பு தொடர்பான அனைத்து பணிகள்.

ஆ. தேசிய மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களில் இளைஞர்களை ஒருங்கிணைத்து, தன்னார்வத்துடன் பங்கேற்கச் செய்தல்.

இ. இளைஞர்களிடையே ஆளுமைத் திறன் மற்றும் தலைமைப் பண்பை ஊக்குவிக்கும் வண்ணம், வீரதீரச் செயல்கள், பொறுப்புகள், நம்பிக்கை மற்றும் சாதனைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

ஈ. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இளைஞர் குண நலன்கள் மற்றும் இளைஞர் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தல்.

உ. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் வண்ணம் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஊக்குவித்தல்.

ஊ. இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் போட்டிகளை உயர்த்தி மேம்படுத்துதல்.

எ. மாநில இளைஞர் விருதுகள் வழங்குவதன் மூலம் பல்வேறு துறைகளில் அவர்களின் திறமைகளை அங்கீகரித்தல்.

ஏ. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான சாதனங்கள் வெளியிடுதல்.

ஐ. நேரு இளையோர் மையம், தேசிய புனரமைப்புப் படைத் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலம் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்துதல்.

ஒ. மாநில இளைஞர் விழா நடத்துதல். திறமை மிக்க இளைஞர்களை தேர்ந்தெடுத்து தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்க அனுப்புதல்.

ஓ. இளைஞர் வருகையினை அதிகரிக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர் விடுதிகளில் வசதிகளை மேம்படுத்துதல்.

இளைஞர் நல இயக்குநரகமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலர் மற்றும் உறுப்பினர் செயலர் இளைஞர் நல அலுவல்சாரா இயக்குநராகவும் செயல்படுவார்.

## 9.2 <u>இளைஞர் விடுதிகள்</u>

சரித்திரப் பிரசித்தி பெற்ற மற்றும் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் இடங்களை சாகசப் பயணம், கல்விச் சுற்றுலாவின் மூலம் அதிகளவிலான இளைஞர்கள் குறைந்த செலவில் தங்கியிருந்து கண்டுகளிக்க இளைஞர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணை திட்டமாக இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றது. இளைஞர் விடுதிகளுக்கு நிலங்களை முழு வளர்ச்சியடைந்த பகுதியில் இலவசமாக மாநில அரசு வழங்குகிறது. மத்திய அரசு கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டும் வருகிறது.

தற்போது, தமிழ்நாட்டில் 5 இளைஞர் விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் 1. சென்னை, 2. மதுரை, 3. தஞ்சாவூர் 4. உதகமண்டலம் மற்றும் 5. திருச்சி ஆகிய இடங்களில்

உள்ளன. இந்த இளைஞர் விடுதிகளின் வசதிகளை ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

## <u>படலம் – 10</u>

## <u>தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல்</u>

10.1 தற்போதைய நவீன உலக பார்வையில் சமூக ஊடகப் புரட்சிக்கு ஒரு மிகப்பெரிய பங்கு உண்டு. சமூக ஊடகம் என்பது தனிப்பட்ட மற்றும் உடனடி தகவல் தொடர்பு முறையாகும். பெரும்பாலான மக்கள், தகவல் தொடர்பான ஒளிபரப்பு, காட்சி மற்றும் அச்சு ஊடகத்தை விட சமூக ஊடகத்திற்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

